0019

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் இளங்கலை சிறப்பு மானிப்பட்டம்
கணக்கியல் மற்றும் நிதியியல்
மட்டம்: 04
கல்வியாண்டு II

**AFU4574: இடைநிலை கணக்கீடு (*Intermediate Accounting*)**

இறுதிப் பரீட்சை – 2024/2025
காலம் – 03 HOURS
திகதி: 11.01.2026 நேரம்: 1.30pm – 4.30pm

அறிவுறுத்தல்கள்:
வினா இல 1க்கும், பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
உங்கள் செய்கை வழிமுறைகளை தெளிவாகக் காட்டவும்.
நிரற்படுத்தப்படாத கணிப்பான் பாவனை அனுமதிக்கப்படுகிறது.

## பகுதி I (கட்டாய வினா)

வினா இல. 1

(a) (அ) 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் எண் 7 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் சூழலில் "ஒதுக்கங்கள்" என்பதன் அர்த்தத்தை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குங்கள். **(05 புள்ளிகள்)**

(b) பொது நோக்க நிதிக் கூற்றுக்களின் குறிக்கோளினை விளக்குக. **(06 புள்ளிகள்)**

(c) மார்ச் 31, 2025 இன் படி ககனா பிஎல்சியின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பின்வரும் பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 31, 2025 இல் பரீட்சை மீதி (Rs.'000)

| | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனை கிரயம்/ விற்பனை | 18,000 | 40,000 |
| மார்ச் 31, 2025 இல் இருப்பு | 2,400 | |
| செயற்படு மூலதனம் | 7,000 | |
| நிர்வாக செலவுகள் | 2,700 | |
| விநியோக செலவுகள் | 1,400 | |
| ஆதனம், பொறி, உபகரணம் – கிரயம்/ மீள்மதிப்பீடு | | |
| காணி | 12,000 | |
| கட்டடம் | 19,000 | |
| மோட்டார் வாகனம் | 15,000 | |
| அலுவலக உபகரணம் | 3,000 | |
| ஏப்ரல் 1, 2024 இல் திரண்ட பெறுமானத்தேய்வு | | |
| கட்டடம் | | 5,000 |
| மோட்டார் வாகனம் | | 6,000 |
| அலுவலக உபகரணம் | | 400 |
| வங்கியில் உள்ள காசு | 2,100 | |
| கையிலுள்ள காசு | 600 | |
| வியாபாரப் பெறவேண்டியவை/ வியாபார செலுத்தவேண்டியவை | 4,000 | 3,200 |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 1, 2024 நிலவரப்படி வியாபாரப் பெறவேண்டியவைகளில் ஏற்பட்ட ஐயப்பாட்டிற்கான கொடுப்பனவு | | 500 |
| உரிமைப் பங்குகளிலான முதலீடு | 5,000 | |
| வருமான வரி செலுத்தியது | 1,100 | |
| இடைக்கால பங்கு இலாபம் செலுத்தியது | 300 | |
| ஏனைய செலுத்த வேண்டியவை | | 600 |
| நீண்டகால வங்கிக்கடன் | | 5,000 |
| ஏனைய செலவுகள் | 1,400 | |
| கூறப்பட்ட மூலதனம் - 2,000,000 சாதாரண பங்குகள் | | 24,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 3,000 |
| ஏப்ரல் 1, 2024 இல் நிறுத்தி வைத்த இலாபம் | | 7,000 |
| ஏப்ரல் 1, 2024 இல் செலுத்த வேண்டிய வருமான வரி | | 300 |
| | 95,000 | 95,000 |

பின்வரும் மேலதிக தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

- ஏப்ரல் 1, 2024 அன்று, நிறுவனத்தின் மோட்டார் வாகனம் ரூ.8,000,000க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, கணக்குப் புத்தகங்களில் இது தொடர்பாக வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

- ஆண்டு இறுதி இருப்பு கணக்கெடுப்பில், ஆண்டுடின் இறுதி இருப்புக்களில் ரூ.500,000 மதிப்புள்ள மெதுவாக நகரும் இருப்புக்கள் (slow moving inventories) உள்ளடங்கியிருந்தது தெரியவந்தது. இந்த இருப்புக்கள் ஏப்ரல் 5, 2025 அன்று ஒரு வாடிக்கையாளருக்கு ரூ.100,000க்கு விற்பனை செய்யப்பட்டது.

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பின்வரும் விகிதங்களில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும்..

  கட்டடம் : 5% ஆண்டிற்கு
  மோட்டார் வாகனம் : 10% ஆண்டிற்கு
  அலுவலக உபகரணம் : 20% ஆண்டிற்கு

- நிறுவனம் ரூ.80,000 அறவிடமுடியாக் கடன்களை பதிவளிக்கவும், மீதமுள்ள வியாபாரப் பெறுவனவுகளில் 10% தொகையை அவற்றின் ஐயக்கடன் கணக்கில் ஒதுக்கவும் முடிவு செய்தது.

- 2024/25 மதிப்பீட்டு ஆண்டிற்கான மொத்த வருமான வரி பொறுப்பு ரூ.1,200,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருமான வரி செலுத்துதல்கள் " செலுத்தப்பட்ட வருமான வரி " கணக்கில் பதிவு செய்யப்பட்டன, இதில் 2023/24 ஆம் ஆண்டிற்கான இறுதி வரிக் கொடுப்பனவாக செலுத்தப்பட்ட ரூ.200,000 அடங்கும்.

- நிறுவனத்தின் கொள்கையானது ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் அதன் காணியை மீள் மதிப்பீடு செய்வதாகும். இந்தக் கொள்கையின்படி, காணி மார்ச் 31, 2025 அன்று ரூ.17,000,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. இருப்பினும், இந்த மீள் மதிப்பீடு கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

- இந்த ஆண்டில், நிறுவனம் தனது புதிய நிர்வாகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை முடித்து, ஜனவரி 1, 2025 முதல் அதனை செயல்பாட்டிற்குப் பயன்படுத்தியது. இந்தக் கட்டிடத்திற்கான மொத்த கட்டுமானச் செலவு செயற்படு மூலதனக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்தச் செலவில் ஒரு பகுதி, ஜனவரி 1, 2024 அன்று 10% வருடாந்த வட்டி விகிதத்தில் பெறப்பட்ட வங்கிக் கடன் மூலம் நிதியளிக்கப்பட்டது. முதன்மைக் கடன் தொகை, ஜனவரி 1, 2026 முதல், ரூ. 1,000,000 என்ற ஐந்து சமத் தொகைகளில் ஆண்டுதோறும் திருப்பிச் செலுத்தப்படும்.

ககனா பிளஸ்சி பிரசுரிப்பதற்கு ஏற்ற வடிவத்தில் பின்வருவனவற்றை நீங்கள் தயாரிக்க வேண்டப்படுகின்றீர்கள்:

(i) மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று.

(ii) மார்ச் 31, 2025இல் நிதி நிலைமைக் கூற்று.

(iii) மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்ற கூற்று.

(iv) மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அசைவுக் கூற்று அறிக்கை.

**(29 புள்ளிகள்)**

**(மொத்தம்: 40 புள்ளிகள்)**

## பகுதி II

**வினா இல. 2**

**(a)** இலங்கை கணக்கியல் தரநிலை எண் 07 இன் படி "காசு மற்றும் காசிற்கு சமமானவை" என்ற சொல்லை விளக்குக. **(04 புள்ளிகள்)**

**(b)** பீட்டா லிமிடெட்டின் மார்ச் 31, 2024 மற்றும் மார்ச் 31, 2025 நிலவரங்களின் படி நிதி நிலைமைக் கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பீட்டா Ltd.
மார்ச் 31 இல் நிதிநிலைமைக் கூற்று

| | **2025** | **2024** |
|---|---|---|
| | ரூ'000 | ரூ'000 |
| நடைமுறை அல்லா சொத்துக்கள் | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 5,300 | 4,700 |
| கழி: திரண்ட பெறுமானத்தேய்வு | (830) | (700) |
| கொண்டுசெல்லும் பெறுமதி | 4,470 | 4,000 |
| நடைமுறை சொத்துக்கள் | | |
| இருப்புக்கள் | 730 | 1,075 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 2,100 | 1,600 |
| காசும் காசிற்கு சமமானவையும் | 1,200 | 1,100 |
| | 4,030 | 3,775 |
| மொத்த சொத்துக்கள் | 8,500 | 7,775 |
| உரிமையும் பொறுப்புக்களும் | | |
| உரிமை: | | |
| கூறப்பட்ட மூலதனம் | 5,500 | 5,000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 830 | 375 |

| | | |
|---|---|---|
| | 6,330 | 5,375 |
| நடைமுறை அல்லா பொறுப்புக்கள் | | |
| கடன் பத்திரங்கள் | 1,200 | 1,200 |
| குத்தகை பொறுப்பு | 400 | 570 |
| | 1,600 | 1,770 |
| நடைமுறை பொறுப்புக்கள் | | |
| வியாபார செலுத்தவேண்டியவை | 250 | 320 |
| குத்தகைப் பொறுப்பின் தற்போதைய விகிதம் | 120 | 170 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 200 | 140 |
| | 570 | 630 |
| மொத்த உரிமையும் பொறுப்புக்களும் | 8,500 | 7,775 |

பின்வரும் மேலதிகத் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

- ஒரு உபகரணமானது ஜூன் 1, 2024 அன்று ரூ.1,200,000 க்கு விற்பனை செய்யப்பட்டது. உபகரணத்தின் விலை ரூ.1,400,000 மற்றும் ஜூன் 1, 2024 அன்று திரண்ட தேய்மானம் ரூ.150,000 ஆகும். இந்தக் கொடுக்கல் வாங்கல் தவிர, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் காணப்படும் வேறுபாடு மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டில் ஒரு மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்யப்பட்டதனை குறிக்கிறது.
- ஆண்டுக்கான கடன் பத்திரங்கள் மற்றும் குத்தகைகளுக்கான வட்டி செலவுகள் ரூ. 210,000 ஆகும், இது ஏற்கனவே ஆண்டுக் காலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
- மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவு ரூ. 250,000 ஆகும்.
- மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டில் நிறுவனம் ரூ.105,000 பங்குஇலாபத்தொகையை வழங்கியது.

மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பீட்டா லிமிடெட் நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினை நேரில் முறையைப் பயன்படுத்தி தயாரிக்க. **(16 புள்ளிகள்)**

**(மொத்தம்: 20 புள்ளிகள்)**

**வினா இல. 3**

பின்வரும் தகவல்கள் மார்ச் 31, 2024 மற்றும் மார்ச் 31, 2025 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டிற்கான சில்வா (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிநிலை அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு | (ரூ'000) |
|---|---|
| விற்பனை | 22,170 |
| விற்பனைக் கிரயம் | 12,620 |
| ஏனைய வருமானம் | 1,600 |
| நிர்வாக செலவுகள் | 3,590 |
| விநியோக செலவுகள் | 2,070 |
| நிதிக் கிரயம் | 780 |
| வருமானவரி செலவுகள் | 1,250 |

| | மார்ச் 31, 2024 நிலவரப்படி (ரூ'000) | மார்ச் 31, 2025 நிலவரப்படி (ரூ'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி, உபகரணம் | 21,300 | 20,600 |
| இருப்பு | 1,450 | 1,130 |
| வியாபார பெறவேண்டியவை | 1,640 | 1,310 |
| காசும் காசிற்கு சமமானவையும் | 710 | 600 |
| வங்கிக் கடன்கள் | 5,750 | 6,340 |
| வியாபார செலுத்தவேண்டியவை | 1,480 | 1,570 |
| கூறப்பட்ட மூலதனம் – சாதாரண பங்குகள் | 16,000 | 15,000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 1,870 | 730 |

மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் விகிதங்கள் கணக்கிடப்பட்டுள்ளன.:

| | | | |
|---|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 51% | விரைவு விகிதம் | 1.8 தடவைகள் |
| தேறிய இலாப எல்லை | 18% | இருப்புப் புரள்வு | 9.1 தடவைகள் |
| சொத்துக்கள் மீதான திரும்பல் | 22% | கடன்பட்டோர் புரள்வு | 7.4 தடவைகள் |
| உரிமை மீதான திரும்பல் | 10% | ஆதனம், பொறி, உபகரணம் மீதான புரள்வு | 1.9 தடவைகள் |
| நடைமுறை விகிதம் | 2.2 தடவைகள் | வட்டிக்காப்பு | 2.5 தடவைகள் |

**வேண்டப்படுவது;**

(a) மேலே உள்ள தகவல்களின் அடிப்படையில் மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் விகிதங்களைக் கணக்கிடுக:

(i) மொத்த இலாப எல்லை
(ii) தேறிய இலாப எல்லை
(iii) சொத்துக்கள் மீதான திரும்பல்
(iv) உரிமை மீதான திரும்பல்
(v) நடைமுறை விகிதம்
(vi) விரைவு விகிதம்
(vii) இருப்புப் புரள்வு
(viii) கடன்பட்டோர் புரள்வு
(ix) ஆதனம், பொறி, உபகரணம் மீதான புரள்வு
(x) வட்டிக்காப்பு

**(10 புள்ளிகள்)**

(b) மேலே கணக்கிடப்பட்ட நிதி விகிதங்களின் அடிப்படையில்/மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான சில்வா (பிரைவேட்) லிமிடெட்டின் செயல்திறனை பகுப்பாய்வு செய்யவும்.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம்: 20 புள்ளிகள்)**

**வினா இல. 4**

(a) ஒரு குறிப்பிட்ட நிதியாண்டின் இலாபம் அல்லது நட்டத்தைப் பகிர்வது தொடர்பாக பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் பயன்பாட்டைப் பற்றி விவாதிக்கவும். **(06 புள்ளிகள்)**

(b) நெலும் மற்றும் ஓலுவும் ஆகிய இருவர் முறையே 3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பங்குடைமை வணிகத்தை நடத்தி வருகின்றனர். ஏப்ரல் 1, 2024 அன்று,

மானெல் என்பவர் ரூ.1,400,000 காசு மூலதனத்துடன் வணிகத்தில் ஒரு பங்காளராக அனுமதிக்கப்பட்டார். புதிய பங்குடைமை ஒப்பந்தத்தில் பின்வரும் நிபந்தனைகள் காணப்படுகின்றன.

- வணிகத்திற்கு வழங்கப்படும் மூலதனத்திற்கு பங்காளர்கள் 5% வட்டி பெற உரிமை உண்டு.
- பங்காளர்களின் மாத சம்பளம்: நெலுமுக்கு ரூ. 10,000, ஒலுவுக்கு ரூ. 15,000, மானெலுக்கு ரூ. 10,000.
- நெலும், ஒலு மற்றும் மானெல் இடையே இலாபப் பகிர்வு விகிதம் முறையே 2:2:1 ஆகும்.
- மானெல் அனுமதிக்கப்பட்டவுடன், வணிகத்தின் நன்மதிப்பு ரூ.1,500,000 ஆக மதிப்பிடப்பட்டது.

மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டில் பங்குடைமை ரூ. 1,340,000 இலாபம் ஈட்டியது. ஏப்ரல் 1, 2024 அன்று (மேற்கண்ட எந்த மாற்றங்களையும் செய்வதற்கு முன்) பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன..

| | | |
|---|---|---|
| மூலதன கணக்கு மீதிகள்; | | ரூ.'000 |
| | நெலும் | 1,500 |
| | ஒலு | 1,100 |
| நடைமுறை கணக்கு மீதிகள்; | | |
| | நெலும் | 800 செலவு |
| | ஒலு | 500 வரவு |

**மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு பின்வருவனவற்றைத் தயாரிக்க;**

(i) இலாபம் அல்லது நட்ட பகிர்வுக் கணக்கு.

(ii) பங்காளர்களின் மூலதனம் மற்றும் நடைமுறைக் கணக்குகள். **(14 புள்ளிகள்)**

**(மொத்தம்: 20 புள்ளிகள்)**

**வினா இல. 5**

**(a)** ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் (Integrated Reporting) இரண்டு (02) நோக்கங்களைக் கூறுக.

**(04 புள்ளிகள்)**

**(b)** நிதித் தகவலின் பயனை மேம்படுத்தும் மூன்று (03) பண்பியல்புகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(c)** இலங்கை கணக்கியல் தரநிலை எண். 38 இன் படி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவுகளுக்கான கணக்கியல் அணுகுமுறைகளை விளக்குக. **(04 புள்ளிகள்)**

**(d)** இலங்கை நிதி அறிக்கையிடல் தரநிலை எண். 15 இன் படி வருவாய் எவ்வாறு அளவிடப்படுகிறது மற்றும் அங்கீகரிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம்: 20 புள்ளிகள்)**

-----முழு பதிப்புரிமை உடையது-----